

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (23.08.2023) நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மகாராஷ்ட்ர மாநில மின் உற்பத்தி நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் அன்பழகன், மகாராஷ்டிர மாநில திறன் வளர்ச்சி நிறுவனத் தலைமை நிருவாக அலுவலர் டாக்டர் நல். இராமசாமி, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு. இரா. செல்வராசு, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஒளவை அருள், நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் வ.ரெ.போ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### டெல்டா மாவட்டங்களில் சுற்றுப் பயணம்:

# திருச்சியில் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்!

திருச்சி, ஆக. 25 - டெல்டா மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக சென்னையிலிருந்து திருச்சி சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவாரூர், நாகை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சி சென்றார். திருச்சி விமான நிலையத்தில், முதலமைச்சருக்கு அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து திருச்சி விமான நிலையத்தில் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து விமான நிலையத்திற்கு வெளியே நூற்றுக் கணக்கானோர் திரண்டு நின்று முதலமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர். காரில் இருந்து இறங்கிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நடந்தே சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் சாலை வழியாக கும்பகோணம் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். சாலையில் நின்று கொண்டிருந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களையும் முதலமைச்சர் பெற்றுக் கொண்டார்.

# தமிழ்நாட்டில் போதுமான மருந்துகள் கையிருப்பில் உள்ளன!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக. 25 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை, மொரிசியஸ் குடியரசு நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் கைலேஷ் குமார் சிங் ஜகுத்பால் நேற்று முன்தினம் (23.08.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின் மருத்துவக் கட்டமைப்புகள், மருந்து மற்றும் உபகரணங்கள் கொள்முதல் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கட்டமைப்புகள் குறித்தும் விளக்கப்பட்டது. மொரிசியஸ் நாட்டிற்கு எதிர்காலத்தில் தேவைப்படும் மருந்துகளை தமிழ்நாடு அரசே கொள்முதல் செய்து தர இயலுமா என்று கேட்டுள்ளார்கள்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்திடமும் இது தொடர்பாக பேசி முடிவெடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாளை மொரிசியஸ் சுகாதாரத் துறை அமைச்சருடன் வந்துள்ள குழு அண்ணா நகரில் இருக்கின்ற மருந்துக் கிடங்கை பார்வையிட உள்ளது.

தொடர்ச்சியாக ஏழுமூர்த்தில் உள்ள மருத்துவ சேவை கழகத்தின் அலுவலகத்திற்கு சென்று அதனை பார்வையிட உள்ளார்கள். ஏற்கனவே அகர்வால் மருத்துவமனை மற்றும் காவேரி மருத்துவமனை ஆகிய இரண்டு தனியார் மருத்துவமனைகளை இந்த குழு பார்வை யிட்டுள்ளது.

**மருந்து கையிருப்புகள்**

தமிழ்நாட்டில் போதுமான அளவு மருந்துகள் கையிருப்பில் உள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 2286 நகர்புற மற்றும் ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலோ, துணை சுகாதார நிலையங்களிலோ பாம்புக்கடி மற்றும் வெறிநாய்க டிக்கான மருந்துகள் இல்லாத நிலை இருந்தது. தற்போது அந்நிலை முற்றிலும் மாறியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, 27.06.2023 அன்று கோவை மதுக்கூர் ஒன்றியத்தில் இதயம் காப்போம் என்ற திட்டம் தொடங்கப்பட்டது. அந்த திட்டத்தின்படி 8713 துணை சுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாரடைப்பிற்கான அறிகுறிகளுடன் யாராவது வந்தால் அவர்களுக்கு Loading dose எனப்படும் மாத்திரைகள் அவர்களுக்கு தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 1141 பேர் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 181 பேர் துணை சுகாதார நிலையங்களிலும் மாத்திரைகளை பெற்று பயனடைந்துள்ளனர்.

சித்த மருத்துவ பல்கலைக் கழகத்தை பொறுத்தவரை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளார்கள். ஆனால் ஆளுநர் அவர்கள் அதற்கு இதுவரை இசைவு தராமல் உள்ளார். இசைவு கிடைக்க பெற்றவுடன் அந்த நிறுவனம் டிவேயே ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அண்ணா நகரில் உள்ள அண்ணா சித்த மருத்துவமனை வளாகத்தில் அமைப்பதற்கும், மாதவரம் பால் பண்ணையில் 25 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு நில மாற்றம் செய்யும் பணிகள் முழுமைபெற்றுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

மொரிசியஸ் குடியரசு நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

மொரிசியல் நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் பழங்காலங்களில் இருந்தே நல்ல நட்பு உள்ளது. எங்கள் நாட்டின் பிரதமர் அவர்களின்ஆலோசனையின்படி தமிழ்நாட்டில் நடைபெறும் G20 மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வந்தோம். உலக சுகாதார அமைப்பின் (WHO) ஆலோசனைப்படி, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் செயல்பாட்டினை அறிந்து கொள்வதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை இன்று சந்தித்தேன்.

இந்த சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும், வெற்றிகரமாகவும் அமைந்தது. தமிழ்நாடு மருத்துவத் துறையில் பன்மடங்கு வளர்ந்த மாநிலமாக உள்ளது, மருத்துவ சேவைகள் மிகச்சிறப்பாக இங்குள்ள மக்களுக்கு கிடைக்கிறது. இன்று நடந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடனான சந்திப்பின் மூலம் தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின் மருத்துவக் கட்டமைப்புகள், மருந்து மற்றும் உபகரணங்கள் கொள்முதல் குறித்து தெரிந்துகொள்வதற்கு பயனுள்ளதாக அமைந்தது.

இவ்வாறு மொரிசியல் குடியரசு நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, எம்.அரவிந்த், மொரிசியஸ் குடியரசு நாட்டின் உயர் ஆணையர் (இந்தியா) தில்லம், தலைமை நிர்வாக அலுவலர் செங்குட்டுவன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. இலக்கிய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ப.ஆ. சண்முகம் எண் 42, கோதண்டராமன் சந்து பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600021. துணைத் தலைவர் - கோ. இராதாகிருஷ்ணன் எண். 47, திருப்பூர் குமரன் தெரு வியாசர்பாடி சென்னை 600039

அமைப்பாளர் - **சி .மணிகண்டன்** எண்.18/69, பர்மா காலனி, காமராஜ் நகர் புது வண்ணாரப்பேட்டை சென்னை - 600 021.

துணை அமைப்பாளர்கள் - ஏ.கே. பால்சாமி எண்.1/1, 10வது தெரு, எழில் நகர், ஏ பிளாக், சென்னை 600118 க. சிவகுமார் எண்.190/317, 4வது தெரு, பி.வி காலனி, வியாசர்பாடி, சென்னை - 600039. கே. ரத்தினவேல் எண்.9/1,சோலைவாழி அம்மன் கோயில் தெரு, கொடுங்கையூர் சென்னை - 600118 பி. ரவிசங்கர் எண்.20/16, கிரேஸ் கார்டன், 5 வது தெரு, ராயபுரம், சென்னை 600013 எம் .லோகநாதன் எண். 30, போஜராஜநகர், 2வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை சென்னை - 600021 ஒலி ஒளி ஆ.பாபு, 1/1, மேற்கு கிருஷ்ணப்பகிராமணி தோட்டம், முதல்தெரு, பழைய வண்ணை. சென்னை - 600021 க. ஜெயராஜ் எண். 8, கிருஷ்ணபிள்ளை தெரு, மெகசிங்புரம், வியாசர்பாடி, சென்னை - 600039.

**சென்னை மேற்கு மாவட்டம்**

தலைவர் - பா. கணேசன எண. 14/30, சின்னப்பா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

துணைத் தலைவர் - தி.டி. பாபு, எம்.காம்., எண். 20/45, பாபு தெரு, வெள்ளா தேனாம்பேட்டை, சென்னை - 600086.

அமைப்பாளர் - **மு. சீனிவாசன், பி.ஏ.,** எண். 55/54, காமராசபுரம், 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 600034.

துணை அமைப்பாளர்கள் - து. கந்தசாமி, எண். 19, மைக்கேல் பிளாட்ஸ், பழைய வெள்ளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600024. கி. தம்பிதுரை, எண். 25/11, டாக்டர் தாமஸ் சாலை, தி. நகர், சென்னை - 600017. பூ. சந்திரசேகரன் எண். 450, 24வது தெரு, என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம், சென்னை - 600106. அரும். கோ. முரளி (எ) சி.ஜி. கிருபானந்தன், எண். 4/20, புன்னகை பூங்கா, மேற்கு கல்லூரி சாலை, அரும்பாக்கம், சென்னை - 600106. கி. பரமசிவன், பி.ஏ., எண். 139/168, மெயின் ரோடு, அசோகா நகர், அரும்பாக்கம், சென்னை - 600106. இரா. சங்கர், எண். 2/31, தங்கவேலு வைத்தியர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005. நா. அசோகன், 59, டிரைவர்ஸ் காலனி, கிரியப்பா ரோடு, தி. நகர், சென்னை - 600017,

**மயிலாடுதுறை மாவட்டம்**

தலைவர் - மா. இராசாஙகம, குருமூாததபுரம, அல்லிவிலாகம் (அ), சீர்காழி, மயிலாடுதுறை.

துணைத் தலைவர் - என். தங்கவேல், பி.எஸ்.சி., பி.எட்., மெயின் ரோடு, வதிஸ்ட்டாசேரி, அரசூர், பூம்புகார், மயிலாடுதுறை.

அமைப்பாளர் - **இரா. முருகப்பா,** அங்கரகார தெரு, பேராவூர், பூம்புகார், கருப்பூர், காஞ்சிவாய் அஞ்சல், மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் - பி.அங்குதன், எம்.காம்.. 43, எல்லையம்மன் கோயில் தெரு, கூழையார் மற்றும் அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை. ந.செ. இளமுருகு பொற்செல்வன், வலம்புரி நகர், பூம்புகார் சாலை, மயிலாடுதுறை. பு. இரவிச்சந்திரன் செட்டி தெரு, திருவிழந்தூர், மயிலாடுதுறை. ஆர். உதயசங்கர் பிள்ளையார் கோவில் தெரு, பாலாக்குடி, மயிலாடுதுறை. கே. அரிகிருஷ்ணன் தாண்டவர்குளம் அஞ்சல், சீர்காழி, மயிலாடுதுறை. ஜெ. நடராஜன் புதுநகர், குத்தாலம், மயிலாடுதுறை. து. மாணிக்கம், கீழத் தெரு, செண்பகச்சேரி, திருமங்கலம், மயிலாடுதுறை.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - சி. மாணிககராஜ 4/7ஏ, மேற்கு வீதி, பெத்தநாயக்கன்பாளையம், கோவை - 17.

துணைத் தலைவர் - ஏ. சிவக்குமார் 3/208, பிள்ளையார் கோவில் வீதி, கொண்டயம்பாளையம் , கோவை.

அமைப்பாளர் - **செ. ராஜேந்திரன்** 13, சக்தி நகர், பிரஸ் காலனி, கோவை - 019.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.என். லோகநாதன் ஆர்.ஜி. புதூர், சின்னியம்பாளையம் (அ), கோவை - 062. பாலமுருகன் (எ) பாபு 1/799இ, /1பி, அர்ச்சனா கார்டன், கண்ணார்பாளையம், காரமடை, கோவை. ஜெயலபுதீன் 143/34, வடுகர் காலனி, எஸ். எம்.நகர், மேட்டுப்பாளையம், கோவை. சிவ. சு. அன்பரசு மகாதேவபுரம் மெயின் ரோடு, மேட்டுப்பாளையம், கோவை - 641305. நஞ்சுண்ட மூர்த்தி பட்டகாரம்பாளையம், இரும்புரை, கோவை. அ. காளிமுத்து 468/2, கிருஷ்ணன் வீதி, ஆர்.எஸ். புரம் அஞ்சல், கோவை. திருவேங்கடசாமி 1/155, பத்மா பார்க் விஜயா நகரம், புஜங்கனூர், காரமடை, கோவை.

**கோவை தெற்கு மாவட்டம்**

தலைவர் - பி.வி. செலவகுமாா 6/191, பவாலும் தோட்டம். காவேரி நகர், பட்டணம் - சூலூர், கோயம்புத்தூர்.

துணைத் தலைவர் - க. கணேஷ்பாபு 77/ஏ, கணேசபுரம், போத்தனூர்,கோவை - 641023.

அமைப்பாளர் - **கே. தியாகராஜன்** 166/ஜி.வி.எல். நகர், செட்டிபாளையம், கோயம்புத்தூர் - 641010.

துணை அமைப்பாளர்கள் - பி.எஸ். மோகன்ராஜ் ஸ்ரீ கார்த்திகேயா ஜுவல்லரி, 47, மெயின் ரோடு, சோமனூர், கோவை - 641668. சூ.ர. பொன்னுச்சாமி 341, கலங்கல் பாதை, சூலூர், கோயம்புத்தூர் - 641402. நாகபாவனி 25, ராஜீவ் காந்தி நகர், கணியூர், கோவை. கி. பிரியாராம் 10/310, அட்லாண்டிக் நகர், மதுக்கரை மார்க்கெட், கோயம்புத்தூர் - 641105. ஆர். தென்றல் ரமேஷ், எம்.ஜி.ஆர். நகர், 3 வது வீதி, பண்ருட்டி நேரு பள்ளி அருகில், சிட்கோ, மதுக்கரை, கோவை - 641021.

**கோவை மாநகர் மாவட்டம்**

தலைவர் - மானூா புகழேநதி 63, பாரதிதாசன் நகர், ராமநாதபுரம், கோவை - 45.

துணைத் தலைவர் - மு. ராம்குமார் 15/4, ரட்சகர்புரம் 3வது தெரு, சௌரிபாளையம், கோவை - 28.

அமைப்பாளர் - **எஸ். ராஜ்குமார்** 16/40, காமாட்சி நகர், 10/பி காலனி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை - 15.

துணை அமைப்பாளர்கள் - க. வெங்கடகிரி 3/ஏ. லட்சுமி நகர், தொண்டாமுத்தூர் ரோடு, கோவை - 46. வெ.க. அங்கண்ணன் 74, நஞ்சுண்டாபுரம் ரோடு, ராமநாதபுரம், கோவை - 45. வெ. ஜெயராமன், 1196, டி.என்.எச்.பி. காலனி, சிங்காநல்லூர், கோவை. சிங்கை ப. கனகராஜ் 33/40, குமரன் வீதி, வரதராஜபுரம் மேடு, உப்பிலிபாளையம் அஞ்சல், கோவை - 15. பே. நா. ஆறுமுகம் 13/8, அருணாச்சலதேவர் காலனி, இராமநாதபுரம், கோவை - 45. இரா. பழனிச்சாமி 29, மறைமலையடிகள் நகர், பீளமேடு புதூர், கோவை- 4.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - நெலலை ஏ. ரவி 151ஏ/3, சாலியர் தெரு, திருநெல்வேலி.

துணைத் தலைவர் - எஸ். தங்கபாண்டி 10/143, சாரதாம்பாள் நகர், சங்கர் நகர், திருநெல்வேலி.

அமைப்பாளர் - **எம். சின்னத்துரை** 154/1, அம்மன் சன்னதி தெரு, கங்கைகொண்டான், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - ஜெ. பழனி வேலாயுதம் சி/39, 10வது குறுக்கு தெரு, என்.ஜி.ஓ. ஏ. காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி. ஏ. சமுத்திரம் 5/73, அம்மன் கோவில் தெரு, பண்ணமடை, மானூர், திருநெல்வேலி. எஸ். மாரியப்பன் 336, மேலத் தெரு, வல்லவன் கோட்டை, திருநெல்வேலி. ஏ. ராமமூர்த்தி 54, நடுவூர் தெரு, புது அம்மன் கோவில் தெரு, தச்சநல்லூர், திருநெல்வேலி - 627358. நெல்லை ஜாபர் 15, வடக்கு தைக்கா தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி.

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் - ராஜேஸவாி 19/ஏ, அனவரத சுந்தர விநாயகர் கோவில் தெரு, பழையபேட்டை, திருநெல்வேலி.

துணைத் தலைவர் - ஜி. நர்மதா 5/53, பாண்டியன் தெரு, கக்கன் நகர், திம்மராஜபுரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

அமைப்பாளர் - **கு. நச்சினார் இனியன்** 854, 2வது தெரு, டி. வி.எஸ். நகர், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - உத்திரநாயகம் செல்வவிநாயகர் கோவில் தெரு, கொக்கிரகுளம், திருநெல்வேலி. அப்துல் மஜித் 613, கே.ஓ.பி. 3வது தெரு, பேட்டை, திருநெல்வேலி. ஆர்.பி.எஸ். ராமச்சந்திரன் 64, புகழேந்தி தெரு, திருநெல்வேலி டவுண், திருநெல்வேலி. நயினார் சுந்தரம் 42, சங்கரன் கோவில் ரோடு, தச்சநல்லூர், திருநெல்வேலி. வைரமணி 9/10, சாமியார் தைக்க தெரு, திலி டவுண், திருநெல்வேலி.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - கலைமாமணி எம.எஸ. ராஜா, 97, முதல் மாடி, பெருமாள் கோவில் தெரு, புதுச்சேரி - 1.

துணைத் தலைவர் - வி.எஸ். பாண்டியன், 25, பீஷ்மர் வீதி, கென்னடி கார்டன், இலாசுப்பேட்டை, புதுச்சேரி - 605008.

அமைப்பாளர் - **சீனு. மோகன்தாசு** 9. குளக்கரை வீதி, கல்வே பங்களா, புதுச்சேரி - 605011.

துணை அமைப்பாளர்கள் - சொ.சோமசுந்தரம் 81, பிள்ளையார் கோவில் தெரு, கணபதிசெட்டிக்குளம், புதுச்சேரி - 605014. த. தர்மராஜா 25, எஸ்.பி. சத்திரம், கென்னடி நகர், புதுச்சேரி - 1. ரா. ஆளவந்தார் 32, ஒத்தவாடை வீதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி - 5. நா. கோதண்டபாணி 158, முதன்மைச் சாலை, மதி கிருஷ்ணாபுரம், மணப்பட்டு, பாகூர், புதுச்சேரி - 607402. கே. கலிவரதன் 37, திருவள்ளுவர் வீதி, சிவலிங்கபுரம், அரியாங்குப்பம், புதுச்சேரி - 7. த. கலிமுல்லா 43, அஞ்சுமன் தெரு, சுல்தான்பேட்டை, புதுச்சேரி - 605110. அ. ஜபருல்லா சின்னக்கவுண்டர் வீதி, காக்காயன்தோப்பு, அரியாங்குப்பம், புதுச்சேரி - 605007.

**தாம்பரம் மாநகரம்**

அமைப்பாளர் - **மலா. மு. கருணாநிதி** 3, தங்கம் ரோடு, லட்சுமிபுரம் குரோம்பேட்டை, சென்னை - 600044.

துணை அமைப்பாளர்கள் - சித்திரம் ஜா. வாசுதேவன் 85, அற்புதம் நகர், கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை - 600045. வி. பாலசுப்பிரமணியம், 12, யூனியன் கார்பெட் காலனி முதல் தெரு, பழைய பல்லாவரம், சென்னை - 600117. க. பூவண்ணன் 15, வெங்கடாசலபதி தெரு, ராஜகீழ்பாக்கம், சென்னை - 600073. தே. புனிதவேல் 12, மன்னார்சாமி கோயில் தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070. டி. இளங்கோவன், 4, அண்ணா தெரு, புதுவஞ்சேரி, மாடம்பாக்கம், சென்னை - 600126.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 23-08-2023

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

தமிழ்நாடுஅரசு
**பொதுப்பணித்துறை**
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 6/2023 - 2024/கபவ/சென்னை/நாள்: 23.08.2023
ஒப்பந்தம்- Lump sum
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட பராமரிப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் கட்டிடக் கலை கவுன்சிலில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஒரு உறை முறை | | | | |
| 1. | சென்னை-34 வள்ளுவர்கோட்டத்தினை மறுசீரமைப்பு மற்றும் புதுப்பிப்பதற்கான கட்டடகலை ஆலோசனை சேவைகள் வழங்குதல் | ரூ.100 இலட்சங்கள் | ரூ.60,000/- 9 (ஒன்பது) மாதங்கள் | Reputed Firms having Registered with Council of Architecture and having previous experience in similar nature of work. |

குறிப்பு :-
1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in
2. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 01.09.2023 மாலை 3.00 மணி வரை
3. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 01.09.2023 மாலை 4.00 மணி

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட பராமரிப்பு வட்டம், (கூ./பொ) சேப்பாக்கம், சென்னை-5.
செ.ம.தொ.இ/4723 /ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.32/2023–2024/வ1/நாள்–17.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **நாகர்கோவில் (நெ), க(ம)ப கோட்டத்தை** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 (1 வேலை) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **11.09.2023-14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **25.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4664/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
கண்காணிப்புப்பொறியாளர் (நெ) க(ம)ப வட்டம், திருநெல்வேலி

# இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட

# மீனவர்களின் 33 படகுகளுக்கு ரூ.1.23 கோடி நிவாரணம்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, ஆக. 25 - இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு, தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழ்நாடு மீனவர்களின் 33 படகுகளுக்கு ரூ.1.23 கோடி நிவாரணம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமை செயலாளர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:-

இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழ்நாடு மீனவர்களின் படகுகளுக்கு நிவாரணம் வழங்குவதில் விடுபட்டு போன 21 விசைப் படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 லட்சமும் மற்றும் 12 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் என மொத்தம் 33 படகுகளின் உரிமையாளர்களுக்கு ரூ.1.23 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை,**
**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.31 / 2023–2024 / தவஅ / நாள்: 21.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால், செங்கல்பட்டு (நெ) க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி. 2023 – 2024 (1 பணி) **இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **11.09.2023** பிற்பகல் 12.30 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **25.08.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப சென்னை வட்டம்.
செ.ம.தொ.இ./4667/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
**நீர்வளத்துறை**
பாலாறு வடிநில வட்டம், சேப்பாக்கம், சென்னை–600005.
மொத்த தொகை ஒப்பந்த முறை–விலை விகித ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / இரு உறை ஒப்பந்த வழி முறை
மின்னனு – குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.08 PBC / 2023–24 / நாள்.21.08.2023

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் இ–டெண்டர் மூலமாக இரு உறை ஒப்பந்த வழி முறையாக இணையதளத்தில் தகுதியுள்ள ஒப்பந்தம் கீழ்கண்டவாறு வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | வேலையின் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தம் சமர்ப்பிக்கும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) | ஒப்பந்தம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் (சர்வர் நேரப்படி) |
|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் பக்கிங்காம் கால்வாயில் சேரும் சிறுசேரி வடிகாலில் (Reach–I) ஒருங்கிணைந்த புனரமைத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல் பணிகள் (இரண்டாம் அழைப்பு) | 1235.00 | 01.09.2023 15.30 மணி வரை | 01.09.2023 16.30 மணிக்கு |
| 2. | காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டத்தில் அடையாறு கால்வாயில் சேரும் தாரப்பாக்கம் வடிகாலினை ஒருங்கிணைந்த புனரமைக்கும் மற்றும் புத்துயிர் அளிக்கும் பணிகள் | 1887.00 | 14.09.2023 11.00 மணி வரை | 14.09.2023 15.00 மணிக்கு |
| 3. | காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டத்தில் அடையாறு கால்வாயில் சேரும் குன்றத்தூர் வடிகாலினை ஒருங்கிணைந்த புனரமைக்கும் மற்றும் புத்துயிர் அளிக்கும் பணிகள் | 928.00 | 14.09.2023 11.00 மணி வரை | 14.09.2023 15.30 மணிக்கு |

இதர அனைத்து விவரங்களும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை வரிசை எண்.1–ல் உள்ள பணிக்கு 24.08.2023 முதலும் மற்றும் வரிசை எண்.2&3–ல் உள்ள பணிகளுக்கு 28.08.2023 முதல் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கவும் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தல் இணையத்தளத்தின் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

செ.ம.தொ.இ/4678/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."
சிறப்பு தலைமைப் பொறியாளர், நீ.வ.து., பாலாறு வடிநில வட்டம், சென்னை–5.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் ரூ.62.20 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் திருமதி மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர் திருமதி.அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 5**
ம.அ.5.ந.க.எண்.இ1/6381/2023
**மின்னணு ஒப்பந்தம் அறிவிப்பு (2 Covers system)**

**பணியின் விவரம்:** சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி - மண்டலம் - 5, பகுதி - 12, வார்டு - 52ல் கல்லறை சாலையில் புதிதாக சமுதாய நலக்கூடம் **(G, 1st Floor)** கட்டும் பணிக்கு மண்டல அலுவலர் - 5 அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றன. **(பணியின் மதிப்பு ரூ.1,16,28,000/-)**

ஒப்பந்ததாரர்கள் **https//tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னணு ஒப்பந்தத்தில் நாள் **06.09.2023 பிற்பகல் 3.00** மணிக்குள் பங்கேற்கலாம். **07.09.2023 அன்று பிற்பகல் 3.30 மணிக்குள்** ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 4717 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்
**மண்டல அலுவலர் - 5**

தமிழ்நாடு அரசு
**திருப்பூர் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
ஓ.அ.எண். 09 / 2023 - 24 / தவஅ / நாள்: 21.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருப்பூர் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2010-2011 திட்டப்பணிகள் திருப்பூர் (நெ), க(ம)ப, கோட்டத்தைச் சார்ந்த **( தனிப்பணிகள் எண்ணிக்கை 1 )** பணிகளுக்கு இணைய வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 12.09.2023 அன்று 11.00 மணிவரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 28.08.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 4692 / ஒப்பந்தப்புள்ளி / 2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, வட்டம், திருப்பூர்.